# ஐந்தாம் ஆண்டுக்கான தேசியப்பள்ளித் தமிழ்ப் பாடநூலில் காணப்படும் நன்னெறிக் கூறுகள் Moral values in national school's standard five Tamil text book

திலிப்குமார் அகிலன் | Thilipkumar Akilan

சுல்தான் இத்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா, dhilipchandrusp@gmail.com

தேவேந்திரன் சுகுமார் | Deventhiran Sukumar

தாமான் மோலேக் தேசியப்பள்ளி, மலேசியா dhev_akhbar@yahoo.com

## ஆய்வுச்சுருக்கம்

மாணவர்கள் மத்தியில் நன்னெறிக்கூறுகளின் விதைப்பு மிக முக்கியமானதாகும். அவர்கள் தேசியக் கல்விக் கொள்கையின்படி முழுமையான, ஆக்கப்பூர்வமான, விழுமியங்கள் பொருந்திய மாணவர்களாக உருவாக நன்னெறிக் கூறுகளின் செவ்விய அறிமுகம் மிக இன்றிமையாததாகும். பள்ளிகளில் முக்கிய மேற்கோளாக விளங்குவன பாடநூல்களாகும். இப்பாட நூல்கள் மாணவர்கள் மத்தியில் நன்னெறிக் கூறுகளை இலகுவாகக் கொண்டு சேர்க்கும் ஊடகங்களாகச் செயலாற்றுகின்றன. அவ்வகையில், சொல், சொற்றொடர், வாக்கியம், பத்தி, கட்டுரை, கதை, மொழியணிகள் என எல்லாவிதமான வகையிலும் தேசியப்பள்ளி ஐந்தாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலில் காட்டப்பட்டுள்ள நன்னெறிக்கூறுகளை இக்கட்டுரைப் பட்டியலிடும். தேசியப்பள்ளிக்கான ஐந்தாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலை மட்டுமே இக்கட்டுரை ஆய்வு எல்லையாகக் கொண்டுள்ளது. உள்ளடக்கப் பகுப்பாய்வு எனும் முறையைப் பயன்படுத்தி இவ்வாய்வு நகரவிருக்கிறது. இது ஒரு பண்புசார் ஆய்வாகும்.

## Abstract

Moral values should be implemented among students. Its important to introduce moral values in the proper way among students to mold them as excellent students. Textbooks are a major reference tool in schools. According to that, this paper will discuss moral values which are found in National school Tamil text books. Limitation of research for this paper is National school Tamil year five textbook.This paper will use content analysis method and this is a qualitative research.

**திறவுச்சொல் (Keywords) :** தேசியப்பள்ளி, தமிழ்மொழி, பாடநூல், நன்னெறி, மாணவர்கள், தேசியக் கல்விக்கொள்கை, National school, Tamil, Textbook, Moral, Students, National Education Philosophy.

## அறிமுகம்

ஒரு நாட்டின் மேம்பாடு என்பது அதன் கல்வி அடைவுநிலையை அடியொற்றியதாகும். நாட்டிலுள்ள கல்வித் தரத்தின் அளவு மேம்பாடையும்பொழுது, மக்களின் ஆக்கத்தன்மையும்

அதிகரிக்கும் *(Yeni Ratmelia, 2018).* அதன் பொருட்டு, மாணவர்களுக்காக வடிவமைக்கப்படும் கல்வி மூலங்கள் அவர்களின் ஆக்கத்தன்மை, பண்பு, நன்னடத்தை, சிந்தனை, அறிவாற்றல் ஆகியவற்றை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். கல்விச் சட்டம் (1996), குறிப்பிடும் மலேசியக் கல்வியின் முதன்மை நோக்கத்தை ஆராய்கையில், அது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் ஆகியன அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவற்றை ஒன்றிணைத்து ஒரு சமன்நிலையும் இயைபும் கொண்ட தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியென பகர்கிறது. அதன் வழியில், அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் கொண்ட, குடும்பம், சமூகம், நாடு ஆகியவற்றிற்கு உழைக்கும் நல்ல மலேசியரை உருவாக்குவதை இந்தத் தேசியக் கல்விக் கொள்கை முதன்மை நோக்கமாகக் கொண்டு நகர்கிறது. மேலும், தேசியக் கலைத்திட்ட வரையறையின் சாரத்தை ஊடாடுகையில், அதுவும் மாணவர்களை ஆன்மீகம், அறிவு, உடல், உள்ளம் ஆகிய வகைகளில் மேம்படச் செய்து, அவர்களிடத்தில் பண்பு விதைப்பைச் செய்து அதை மேம்படுத்தவும் வழிச் செய்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது (கல்வி விதிமுறைகள் (தேசியக் கலைத்திட்டம்) 1997). ஆக, ஒரு மாணவன் முழுமையானவனாக உருவாக அவனிடத்தில் நன்னெறிப் பண்புகள் நிரம்பியிருத்தல் அவசியம் என்பது புலனாகிறது. அதன் வழியில், அனைத்துலகத் தரத்திலான கல்வி நிலையை அடைவதற்கு, புதிய மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்ட கல்வித்திட்டத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ள ஐந்தாம் ஆண்டுக்கான தேசியப்பள்ளித் தமிழ்மொழிப் பாடநூலில் காணப்படும் நன்னெறிக் கூறுகளை அடையாளங்கண்டு பட்டியலிடுதல் அவசியமானதாகும். எனவே, இந்த ஆய்வுக்கட்டுரை தேசியப்பள்ளித் தமிழ்மொழிப் பாடநூலில் காணப்படும் நன்னெறிக் கூறுகளை உள்ளடக்கப் பகுப்பாய்வு எனும் அடிப்படையில் பண்புசார் முறையில் ஆராயவிருக்கிறது.

**நன்னெறிக் கூறுகள்**

ஒரு செயலிலுள்ள நல்லது தீயது அல்லது ஒரு நடத்தையிலுள்ள நல்லது தீயது ஆகியவற்றை அளத்தல் நன்னெறியாகும் (Ruslam Hasan, Farid Mat Zain, Kaseh Abu Bakar & Azmul Fahimi Kamaruzaman, 2020). மன்சூரூடின் (2003), இஸ்லாம் நன்னெறி என்பதை நடத்தை, நன்னடத்தை மற்றும் பாத்திரம் என வரையறுக்கிறது. நன்னெறி என்ற சொல் லத்தின் மொழியில் *"Mores"* என்று வழங்கப்படுகிறது. இதுவே, *"Moral"* என்ற சொல்லின் மூலமாகும். இச்சொல் குழுமமாகவோ அல்லது தனியாளாகவோ மனிதர்கள் ஒரு சூழலில் செய்யும் செயற்பாடு என பொருள்படுகிறது (கசாலி, 2007). அதுமட்டுமல்லாது, *"Mores"* என்பது வழமை அல்லது சடங்கு எனவும் பொருள்படுகிறது (Bertens,2003). நன்னெறி என்பது முழுமையாக மற்ற மனிதர்களோடு தொடர்புபடும்பொழுது விளையும் செயல், நடத்தை, பேச்சு என்பதாகும். இது பின்பற்ற வேண்டிய நல்ல செய்கைகள், பின்பற்றக் கூடாத தீய செய்கைகள் ஆகியவற்றின் தொகுப்பாகும். சஹாரா et. al (2015), தம்முடைய *"Pembangunan akhlak dan moral ke arah masyarakat lestari"* எனும் ஆய்வேட்டில் நன்னெறி ஒரு மனிதனை முழுமையாக உருவாக்கத் தேவைப்படும் அம்சமென மொழிகிறார். பெர்தேன்ஸ் (2003), தம்முடைய "*Etika dan moral untuk pengajian tinggi"* எனும் நூலில் மாணவர்கள் மத்தியில் அமல்படுத்த வேண்டிய நன்னெறியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார்.

மலேசியச் சூழலில் நன்னெறி விதைப்பு என்பது முறையான கல்வியின் வாயிலாக செய்யப்படுகிறது. இஸ்லாம் அல்லாத ஒன்றிலிருந்து ஆறாம் ஆண்டு மாணவர்களுக்காக நன்னெறிக் கல்விப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1983- ஆம் ஆண்டு ஆரம்பப்பள்ளி புதியப் பாடத்திட்டத்தின் *(KBSR)* அறிமுகத்தின் மூலமாக நன்னெறிக் கல்வியின் பாடத்திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டது. நாட்டின் கல்வித்திட்டத்தின் மேம்பாட்டினால் 2003-ஆம் ஆண்டு இப்பாடம் மீண்டும் மீளுருவாக்கம் செய்யப்பட்டு, மீண்டும் 2011-ஆம் ஆண்டு மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. 2017-ஆம் ஆண்டுக்கான ஆரம்பப்பள்ளியின் சீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் மூலம் மீண்டும் சீரமைக்கப்பட்ட நன்னெறிக்கல்வி 14 நன்னெறிக் கூறுகளை உள்ளடக்கியிருக்கிறது. அந்த நன்னெறிக் கூறுகளோடு ஏனைய சில நன்னெறிக் கூறுகளும் இணைக்கப்பட்டு, இந்த ஆய்வில் தமிழ்மொழி பாடநூலில் ஆராயப்படவிருக்கின்றன. தேசியப்பள்ளியில் தொடர்பு மொழிப் பாடமாகவும், தமிழ் மாணவர்களின் முக்கியத் தொடர்புமொழியாகவும் இருக்கின்ற தமிழ்மொழிக்கு முதன்மை மேற்கோள் நூலாக இருக்கும் தமிழ்பாடநூலில் நன்னெறிக் கூறுகளின் விதைப்பு என்பது முக்கியம் என்ற அடிப்படையில் இவ்வாய்வு செய்யப்படுகிறது.

## ஆய்வின் நோக்கம்

- தேசியப்பள்ளி ஐந்தாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலிலுள்ள நன்னெறிக் கூறுகளை அடையாளங்காணுதல்.
- தேசியப்பள்ளி ஐந்தாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலிலுள்ள நன்னெறிக் கூறுகள் காட்டப்பட்டுள்ள வகையினை விளக்குதல்.

## ஆய்வு முறைமை

இந்த ஆய்வு பண்புசார் ஆய்வாகும். பண்புசார் ஆய்வென்பது குறிப்பிட்ட சூழலிலுள்ள கருத்துகளை விளக்கப்பாட்டியல் அடிப்படையில் எண்களின் தலையீடு இல்லாமல் விளக்குதலாகும் (Cathryne Palmer & Amanda Bolderston, 2006). மேலும், பாடநூலிலுள்ள நன்னெறிக் கூறுகளின் உள்ளடங்களை ஆராய்ந்து விளக்குவதால் இது உள்ளடக்கப் பகுப்பாய்வையும் உள்ளடக்கி இருக்கிறது. உள்ளடக்கப் பகுப்பாய்வு என்பது ஒரு எழுத்துப் படிவத்தில் உள்ள கருத்துகளைப் பகுத்தாய்தலாகும் (Mulyana & Darmiasti, 2013). பாடநூலிலுள்ள நன்னெறிக் கூறுகளைத் தெளிவாகக் கண்டறிய இம்முறை மிக அவசியமானதாகும்.

## தரவுகள் பகுப்பாய்வு

ஐந்தாம் ஆண்டுக்கான தேசியப்பள்ளித் தமிழ்மொழிப் பாடநூலில் 9 நன்னெறிக் கூறுகள் கண்டறியப்பட்டுள்ளன. நன்னெறிக்கல்வியில் வழங்கப்பட்டுள்ள நன்னெறிக் கூறுகளோடு ஏனையத் தொடர்புடையக் கூறுகளும் இணைத்துக் கொள்ளப்பட்டு, நன்னெறிக் கூறுகள் அடையாளங்காணப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

## I. இயற்கையை நேசித்தலும் போற்றுதலும்

இயற்கையின் சீர்மையைப் பாதுகாக்க அதனை நேசித்தலும் போற்றுதலும் அவசியமாகிறது. இயற்கையை நேசித்தலும் போற்றுதலும் மனிதர்களிடையே இயற்கையைப் பாதுகாக்கும் பண்பினை ஆழ விதைக்கின்றது (Okorondu, 2008). ஒருவருக்கு ஒன்றின் மீது அதீத நேசம் விளையும் போது அதனைப் பாதுகாக்கின்ற உத்வேகம் தானே பிறக்கும் (Souljah, 2011). அந்த

வகையில், இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் இயற்கையை நேசித்தலும் போற்றுதலும் என்ற நன்னெறிக் கூறு 3 இடங்களில் காட்டப்படுகிறது.

"மரம் தந்த வரம்" எனும் தலைப்பின்கீழ் முதலாவதாக, காற்றையும் நிழலையும் தருதல், விலங்குகளின் இருப்பிடமாக இருத்தல், பசுமையை நிலை நிறுத்துதல் ஆகியன காரணங்களுக்காக வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் என்ற கருத்து காட்டப்படுகிறது. இரண்டாவதாக, "நல்ல நண்பன்" எனும் தலைப்பில், விலங்குகளிடத்தில் அன்பு செய்தல் எனும் வகையில் இந்நன்னெறிக் கூறு காட்டப்படுகிறது. இறுதியாக, "வீடு எங்கே" எனும் தலைப்பில் பறவைகள், விலங்குகள், பூச்சிகள் ஆகியவற்றின் வீடுகளைப் பட்டியலிடுவதன் வாயிலாக இக்கருத்து காட்டப்படுகிறது.

## II. அன்பு நெறி

அன்பு நெறி மிகவும் உயரியதாகப் போற்றப்படுகிறது. "அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்" (10.1.1), "அன்பின் வழியது உயிர்நிலை" (குறள்.80), "என்பிலதனை வெயில்போலக் காயுமே அன்பிலதனை அறம்" (குறள்.77) ஆகிய வரிகள் அன்பின் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றன. இத்தகைய அன்பு நெறி, "நல்ல நண்பன்" எனும் தலைப்பில் விலங்குகளிடத்தில் அன்பு செய்தல் எனும் வகையிலும், "வேறுபாடு அறிவோம்" எனும் நடவடிக்கைப் பகுதியில் வெயிலில் வந்தவருக்குப் பானம் கொடுத்தனர் என்ற வாக்கியத்திலும் காட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து, "தொழில்நுட்பம்" எனும் பெருந்தலைப்பின்கீழுள்ள நடவடிக்கை-2 பகுதியில் "மாமா தங்கச் சங்கிலியை அத்தையின் பிறந்தநாள் அன்று பரிசளித்தார்" எனும் வாக்கியத்தில் அன்பு நெறி காட்டப்பட்டுள்ளது. "கல்விக்கூடம் சென்றிடுவோம்" என்ற கவிதையில் "அன்பாய்க் கூடிப் பழகிடுவோம்" என்ற வரியில் அன்பு நெறி காட்டப்பட்டுள்ளது. இறுதியாக, "நல்லதொரு குடும்பம்" என்ற பகுதியில் "பெற்றோர்களின் அன்பான போதனை வாழ்க்கைக்கு வழிகாட்டும்" என்று கூறுவதன் மூலம் அன்பு நெறி காட்டப்படுகிறது.

## III. சுறுசுறுப்பு

வாழ்க்கையில் தொடர்ந்து வெற்றி பெற ஒருவருக்குச் சுறுசுறுப்பு அவசியமாகும் (Mohammad Kahiri, Asmawati & Samsilah, 2015). முதன்முதலில் ஒருவர் கற்றுக் கொள்ளவேண்டிய பழக்கமாகச் சுறுசுறுப்புத் திகழ்கிறது (சுந்தரவடிவேலு, n,d). சுறுசுறுப்பு எனும் நெறி "எறும்பு சொல்லும் பாடம்" எனும் கவிதையில் "சுறுசுறுப்பே வேண்டும் விரும்பு" எனும் வரியில் காட்டப்படுகிறது. தொடர்ந்து "வெற்றி நாட்டுவேன்" எனும் கவிதையிலும் "சோர்வுதனைத் தள்ளுவேன் சுறுசுறுப்பைக் கொள்ளுவேன்" எனும் வரியில் சொல்லப்படுகிறது. இறுதியாக, "காலம் பொன்னானது" எனும் பகுதியில் சோம்பலைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தின் வாயிலாக சுறுசுறுப்பு நெறிக் காட்டப்படுகிறது.

## IV. நேர்மை

நேர்மை என்பது ஏற்புடைய செயல் மற்றும் சொல், உண்மைச் சூழலை விளக்கும் கருத்து விளக்கல், அல்லது விதிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் உறுதிசெய்யப்பட்ட செயலாகும் (Fitriah & Abd.Majid, 2020). புத்தரின் போதனைகளில் நேர்மை என்பது ஏமாற்றும் சூழ்ச்சியும் அற்றத் தன்மை என்று காட்டப்பட்டுள்ளது (ராமசாமி, 1991). ஐந்தாம் ஆண்டுக்கானத் தமிழ்மொழிப் பாடநூலில் நேர்மை எனும் நெறி "ஏமாறாதே ஏமாற்றாதே" எனும் கதையில்,

“பிறரை ஏமாற்றக் கூடாது” எனும் நீதியினைப் புகட்டுவதன் மூலமாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், “அறிவே வெல்லும்” எனும் கதையில் கருமி ஒருவன் ஏழை விவசாயியை ஏமாற்ற நினைக்கிறான். அவ்வாறு ஏமாற்ற நினைத்ததால் அவன் பீர்பால் என்ற அறிவாளியால் தண்டிக்கப்படுகிறான். இதன் மூலமும், யாரையும் ஏமாற்றக்கூடாது என்ற வகையில் நேர்மை நெறி காட்டப்படுகிறது. இறுதியாக, “நேர்மை வேண்டும்” எனும் கதையில் அஸ்வினி எனும் சிறுமியை ஏமாற்ற நினைத்தக் கடைக்காரருக்குப் பெரியவர் ஒருவர் பாடம் புகட்டுவதன் மூலமும் நேர்மை நெறி காட்டப்படுகிறது.

## V. உதவும் மனப்பான்மை

உதவும் மனப்பான்மை என்பது உதவியைப் பெறுதல் அல்லது வழங்குதல் என்பதாகிய மனிதர்களின் குணமாகும் (Putra & Rustika, 2015). உதவும் மனப்பான்மை நெறி தமிழ்மொழிப் பாடநூலில் இரண்டு இடங்களில் வருகிறது. முதலாவதாக, “நல்ல நண்பன்” எனும் பகுதியில் குறிப்பிடப்படுள்ள அமுதன் என்பவனின் பண்பாக “உதவும் மனப்பான்மை கொண்டவன்” என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்ததாக, “உதவும் மனப்பான்மை” எனும் பகுதியில் “பெரியவருக்குக் கடித உறையில் முகவரி எழுத உதவினேன்” என்ற வாக்கியத்தில் உதவும் மனப்பான்மை வழங்கப்பட்டுள்ளது. இறுதியாக, “அன்பான நண்பனை ஆபத்தில் அறி” எனும் பழமொழியின் விளக்கத்தில் “நல்ல நண்பனை அவன் நமக்குத் தக்க சமயத்தில் உதவி செய்வதைக் கொண்டு அறியலாம்” என்று வழங்கப்பட்டுள்ளதன் மூலமாக வெளிகாட்டப்பட்டுள்ளது.

## VI. மதிக்கும் மனப்பான்மை

மதித்தல் எனப்படுவது ஒருவரிடத்தில் பணிவுடன் நடத்தல், சேவையாற்றுதல், தொடர்பாடுதல் என்ற வகையில் அவரை உயர்ந்து நோக்குதல் ஆகும் (Surina Nayan, Latisha Asmaak Shafie, Mahani Mansor, Mohd. Izwan Osman & Nazira Osman, 2011). இந்த மதிக்கும் மனப்பான்மை “நல்ல நண்பன்” எனும் பகுதியில் நட்பை மதித்தல் என்ற வகையில் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக, “நன்னெறி” என்ற பெருந்தலைப்பின் செய்யுளும் மொழியணியும் என்ற பகுதியின் நடவடிக்கை அங்கத்தில் “பெற்றோரிடம் ஆசி பெறுதல் கபிலனின் பழக்க வழக்கம் ஆகும்” என்ற வாக்கியத்தை மதிக்கும் மனப்பான்மை காட்டப்பட்டுள்ளது. இறுதியாக, “தாய் சொல் கேள்” என்ற தலைப்பில் தாயின் சொல்லை மதிக்க வேண்டும் என்ற முறையில் உதவும் மனப்பான்மை நெறி காட்டப்பட்டுள்ளது.

## VII. ஆரோக்கியம்

ஒரு மனிதனின் மேம்பாட்டிற்கு உடல் ஆரோக்கியம் என்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது (Muhammad Hilmi Jalil & Fakhrul Adabi Abdul Kadir, 2013). அத்தகைய ஆரோக்கியம் எனும் நெறி தமிழ்மொழிப் பாடநூலில் 6 இடங்களில் காட்டப்படுகிறது. “விளையாட்டின் அவசியம்” எனும் தலைப்பில் உடல் ஆரோக்கியமாக இருக்க விளையாட்டு அவசியம் என்று கூறுவதன் மூலமாக ஆரோக்கிய நெறி காட்டப்படுகிறது. தொடர்ந்து, “இன்பமாக உண்ணலாம்” எனும் கவிதையில் ஆரோக்கியமான காய்கறி உணவுகளை உண்ணுவதன் மூலம் நலமாக வாழலாம் என்பது கூறப்படுகிறது. அதே போன்ற கருத்து “உணவில் காய், கனி, கீரை” என்ற கவிதையில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், “இட்டலி உண்போம்” என்ற பகுதியில் இட்டலி உண்ணுவதன் மூலமாக ஆரோக்கியமாக இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆக, ஆரோக்கியமான உணவுகளை உண்ணுவதன் மூலமாக

உடலின் நலத்தினைப் பாதுகாக்க முடியும் என்ற விடயம் இதன் மூலமாக விளக்கப்படுகிறது. அடுத்ததாக, “விழித்துக் கொள்” என்ற பகுதியில், அதிகமாக திறன்பேசி பயன்படுத்துவதால் ஏற்படும் நோய்களைப் பட்டியலிட்டு அவ்வாறு செய்யக்கூடாது என்று கூறுவதன் மூலமாக ஆரோக்கியம் எனும் நெறி காட்டப்படுகிறது. இறுதியாக, “யோகாவும் நானும்” என்ற பகுதியில், யோகா உடலுக்கும் மனத்திற்கும் பலன் தரக்கூடியது என்ற வகையில் ஆரோக்கிய நெறி காட்டப்பட்டுள்ளது.

## VIII. ஒற்றுமை

ஒற்றுமை எனும் நெறி “என்னைக் கவர்ந்தவர்” எனும் பகுதியில் துங்கு அப்துல் ரகுமான் இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்த்தார் என்பதிலும்,” கல்விக்கூடம் சென்றிடுவோம்” என்ற பகுதியில் “அன்பாய்க் கூடி பழகிடுவோம்” என்ற வரியிலும், “திறந்த இல்லம்” எனும் பகுதியில் திறந்த இல்லம் இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கிறது என்பதிலும், “இளையோர் உலகம்” என்ற பெருந்தலைப்பின் கீழுள்ள செய்யுளும் மொழியணியும் பகுதியில் “எலியும் பூனையும் போல” என்ற உவமைத் தொடர் வாயிலாகவும், “நல்லதொரு குடும்பம்” என்ற பகுதியில் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமையின் அவசியத்தை உணர்த்துவதன் வாயிலாகவும் வழங்கப்பட்டுள்ளது.

## IX. முயற்சியுடைமை

“முயற்சி திருவினையாக்கும்” (குறள்.616) என்ற குறள் முயற்சி எனும் நெறியின் முக்கியத்துவத்தை நன்கு பறைச்சாற்றுகிறது. “தன்முனைப்பு” எனும் பெருந்தலைப்பின் கீழுள்ள செய்யுளும் மொழியணியும் பகுதியிலுள்ள “முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்” என்ற பழமொழியும், “குன்றின் மேலிட்ட விளக்குப் போல” எனும் உவமைத்தொடர் பகுதியில் விடாமுயற்சியோடு காற்பந்து பயிற்சி செய்யப் போகிறேன் என்ற விளக்கமும், “சாதனை செய்” என்ற பகுதியில் சறுக்குக்காலணி பயிற்சி செய்து அந்தப் போட்டியில் பெறுவதும், “எண்ணமே வாழ்வு” என்ற பகுதியில் உடல் எடையைக் குறைக்க விடாது முயற்சி செய்வதும் முயற்சியுடைமை என்ற நெறியைக் காட்டுகின்றன. மேலும், “கட்டொழுங்கு” என்ற பெருந்தலைப்பின் கீழுள்ள செய்யுளும் மொழியணியும் என்ற பகுதியிலுள்ள “முயற்சி திருவினையாக்கும்” என்ற திருக்குறள் முயற்சியுடைமை பறைச்சாற்றுகிறது. “எதிர்காலத்தில் நான்” என்ற பகுதியிலும் “எதிர்காலத்தில் நான், வாழ்க்கையில் முன்னேற கடுமையாக உழைப்பேன்” என்ற வாசகம் முயற்சியுடைமையைக் காட்டுகிறது. இறுதியாக, “குடும்பம்” என்ற பெருந்தலைப்பிலுள்ள மரபுத்தொடர் பகுதியில் ஒரு பெண் விடாமுயற்சியோடு வாழ்வில் முன்னேறுகிறாள் என்று காட்டுவதன் மூலமாக முயற்சியுடைமை காட்டப்பெறுகிறது.

## முடிவுரை

இதன் மூலம், இந்த ஆய்வில் 9 முதன்மையான நன்னெறிக் கூறுகள் கண்டறியப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. இந்த நன்னெறிக் கூறுகளில் முயற்சியுடைமை என்ற நன்னெறிக் கூறே அதிகமான இடங்களில் பேசப்பட்டுள்ளது. இந்த நன்னெறிக் கூறுகளை வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலமாக மாணவர்களால் வாழ்வில் சிறந்து விளங்க முடியும்.

## துணைநின்றவை


- Ayan, Surina and Shafie, Latisha Asmaak and Mansor, Mahani and Osman, Mohd. Izwan and Osman.
- Nazira (2011) Nilai hormat di kalangan pelajar UiTM Perlis terhadap pensyarah (dari perspektif pensyarah) / Surina Nayan ...[et.al.]. Jurnal Intelek, 6 (1). ISSN 2231-7716.Retreived from http://malrep.uum.edu.my/rep/Record/my.uitm.ir.32072
- Bahagian Pembangunan Kurikulum. (2019). Pendidikan Moral. Dokumen Standard Kurikulum dan
- Pentaksiran. Kementerian Pendidikan Malaysia: Putrajaya.
- Bertens, K.(2003). Etika dan Moral untuk Pengajian Tinggi. Kuala Lumpur: Penerbit Universitiy, Malaya.
- Cathryne Palmer & Amanda Bolderston,( 2006), A Brief Introduction to Qualitative Research, The Canadian journal of medical radiation technology / CAMRT 37(1):pp.16-19. Retrieved from https://www.researchgate.net/publication/237892956_A_Brief_Introduction_to_Qualitative_Research
- Fitriah M.Suud & Abd.Madjid,(2020), Honesty: A Multidimensional Study as Motivation for National Character Building, Hayula: Indonesian Journal of Multidisciplinary Islamic Studies, Vol. 4, No. 1, Januari 2020.DOI:https://doi.org/10.21009/hayula.004.1.06.
- Manshuruddin Jabaidin.(2003). Moral Kunci Pembangunan dalam Islam. Johor Bharu:
- Perniagaan Jahabersa.
- Muhammad Hilmi Jalil & Fakhrul Abadi Abdul Kadir,(2013), KEPENTINGAN KESIHATAN DIRI
- DALAM PEMBANGUNAN INSAN: ANALISIS KARYA FALSAFAH HAMKA (The Importance of Healthy Body in Human Development: Analysis from HAMKA's Philosophical Works), Jurnal Hadhari 5 (2) (2013):pp. 69-84.Retrieved from https://www.researchgate.net/profile/Wan-Mohd-Fazrul-Azdi-Wan-Razali/publication/345601040_E-PROCEEDINGS_OF_THE_INTERNATIONAL_CONFERENCE_ON_AQIDAH_RELIGIONS_AND_SOCIAL_SCIENCES_SIGMA10/links/5fa90befa6fdcc0624202319/E-PROCEEDINGS-OF-THE-INTERNATIONAL-CONFERENCE-ON-AQIDAH-RELIGIONS-AND-SOCIAL-SCIENCES-SIGMA10.pdf
- Mulyana, A. dan Darmiasti. (2009). Hitoriografi Di Indonesia: Dari Magis-Religius Hingga Strukturalis. Bandung: Refika Aditama.
- Okorondu,C.C.,(2008). Discover the Secret of True Love. New York:I, University, Inc.
- Othman, Mohammad Khairi and Suhid, Asmawati and Mat Rashid, Abdullah and Roslan, Samsilah, (2015), Penghayatan nilai murni dalam kalangan pelajar sekolah menengah masa kini,Jurnal Pembangunan Sosial, 18. pp. 1-20. ISSN 1394-6528.
- Putra, I., & Rustika, I. (2015). HUBUNGAN ANTARA PERILAKU MENOLONG DENGAN KONSEP DIRI PADA REMAJA AKHIR YANG MENJADI ANGGOTA TIM BANTUAN MEDIS JANAR DUTA FAKULTAS KEDOKTERAN UNIVERSITAS UDAYANA. Jurnal Psikologi Udayana, 2(2). doi:10.24843/JPU.2015.v02.i02.p08.Retrieved from https://ojs.unud.ac.id/index.php/psikologi/article/view/25199
- Ruslam Hasan, Farid Mat Zain, Kaseh Abu Bakar & Azmul Fahimi Kamaruzaman, (2020), Kefahaman Nilai Etika dan Moral Pelajar di Institusi Pengajian Tinggi: Satu SorotaN Literatur (Understanding of The Dimensions of Ethical and Moral Values In Higher Learning Institutions: A Literature Review), MALIM: Jurnal Pengajian Umum Asia Tenggara 21(2020):pp.126–141https://doi.org/10.17576/malim-2020-2101-10 Retrieved from https://www.researchgate.net/publication/345770142_KEFAHAMAN_NILAI_ETIKA_DAN_MORAL_PELAJAR_DI_INSTITUSI_PENGAJIAN_TINGGI_SATU_SOROTAN_LITERATUR.
- Sarmellaa Santie Rajandran & Kumaraguru Kuppasamy.(2020). Bahasa Tamil Sekolah Kebangsaan. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.
- Souljah,S.(2011).Midnight and the meaning of love.New York: Atria Books.

- Yeni Ratmelia, (April 2018),Nilai Moral Dalam Buku Teks Pelajaran Sejarah (Analisis Terhadap Buku Teks Sejarah Indonesia kelas X) , HISTORIA: Jurnal Pendidik dan Peneliti Sejarah, Vol. I, No. 2, pp.115-122. Retrieved from file:///C:/Users/HP/Downloads/10711-23204-1-PB.pdf.
- Zaharah Hussin, Saedah Siraj, Zai Hazreen Ab Malik, Mohd Ridhuan Mohd Jamil, Ahmad Arifin Sapar & Nurul Rabihah Mat Noh,(2015),Pembangunan akhlak dan moral ke arah masyarakat Lestari,Jurnal Al-Hikmah, 7(2) 2015:pp. 72-87. Retrieved from http://journalarticle.ukm.my/9388/
- அண்ணாமலை. சு.ப. (2002). திருமந்திரம் மூலபாட ஆய்வு பதிப்பு – முதல் பகுதி. சென்னை: கலாஷேத்ரா பதிப்பகம்.
- அண்ணாமலை. சு.ப. (2002). திருமந்திரம் மூலபாட ஆய்வு பதிப்பு – இரண்டாம் பகுதி. சென்னை: கலாஷேத்ரா பதிப்பகம்.
- அண்ணாமலை. சு.ப. (2002). திருமந்திரம் மூலபாட ஆய்வு பதிப்பு – மூன்றாம் பகுதி. சென்னை: கலாஷேத்ரா பதிப்பகம்.
- சுந்தரவடிவேலு, நெ, து.(n.d). எல்லாரும் வாழ்வோம்.கன்னிமாரா பொது நூலகம்: சென்னை.
- ராமசாமி, பா.(1991). புத்தர் போதனைகள். சென்னை: முல்லை நிலையம்.
- வரதராசன். மு.வ. (2008). திருக்குறள் தெளிவுரை. சென்னை: அப்பர் அச்சகம்.


******************